## பாடம் ஏழு



# உங்களுடைய பதில் என்ன?

மேலே உங்கள் பெயரை எழுதி கொடுக்கப்பட்ட காலி இடங்களில் வேதாகம வசன குறிப்புகளை நிரப்பவும்.

## நீங்கள் கேள்விப்படுபவற்றுக்கு பதிலளித்தல்

உங்களுடைய முடிவான தீர்ப்பைக் கொடுக்கும் உங்கள் நேரம் வந்துவிட்டது. இயேசு வரலாற்றின் முக்கியமான மனிதர்களுள் மற்றொரு மனிதனா அல்லது அவர் அதைக்காட்டிலும் மேலானவரா? அவர் கடவுளுடைய குமாரனானால், எல்லாவற்றையும் சிருஷ்டித்தவரானால், நீங்கள் அவரை அசட்டை செய்யமுடியாது.



கேட்பதும் பதிலளிப்பதும்

"நீங்கள் கிறிஸ்துவைக் குறித்து என்ன நினைக்கிறீர்கள்?"[1] என இயேசு கேட்டார். இந்தப்பாடத்திட்டத்தில் நாம் கிறிஸ்துவைக்குறித்து கண்டுபிடிக்க முயற்சி செய்கிறோம். நீங்கள் அவரைக் குறித்து என்ன நினைக்கிறீர்கள்? எவ்வாறு நீங்கள் பதிலளிக்கப்போகிறீர்கள்? இயேசு மக்கள் பதிலளிப்பதை விரும்பியவராக அவர் கூறினவற்றை செயல்படுத்துவதன் மூலம் பதிலளிக்கச் சொல்கிறார். அவர் அவர்களுக்குத் தங்களுடைய காதுகளைப் பயன்படுத்தும்படிக்கும், காதுகேளாதோர் போல் சிரத்தையற்றவர்களாக இருக்க வேண்டாம் என்றும் கூறினார்.

### நீங்கள் இயேசுவுக்கு பதிலளிக்கவேண்டும்.

விரைந்து செயல்படாமலும், காதுகளை விரைந்து பயன்படுத்தாமலும் இருப்பவர்களுக்கு பயங்கரமான விளைவுகள் உண்டு. வாசிக்கவும் மத்தேயு 13:41-43. வசனம் 43ஐ எழுதவும்.

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

### பதிலளிப்பவர்களே அவரது குடும்பத்தினர்

இயேசுவின் உண்மையான குடும்பம்

கடவுளுடைய வார்த்தைகளைக் கேட்டும், கீழ்ப்படியாமலிருக்கிறவர்களுக்கு எதிராக இயேசு எச்சரிக்கிறார். அவர் கடவுளுடைய சித்தத்தைச் செய்பவர்களைத் தமது சொந்த குடும்பமாக எண்ணுகிறார். வாசிக்கவும் லூக்கா 8:19-21. வசனம் 21-ஐ எழுதவும்.

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

## செயல்படாமல் இருத்தல் நித்திய அழிவை கொண்டுவருகிறது.



இரண்டு வீடுகளின் உவமை

இயேசு கூறுவதைக் கேட்க விருப்பமுடைய பலர் இருந்தனர் - ஆனால் அவர்களில் எல்லாருமே மனந்திரும்ப ஆயத்தமாக இல்லை, அவருடைய போதனைகளுக்குப் பதிலளிப்பதில்லை. அவர்கள் ஆர்வமுடன் ஆண்டவரே என்று அழைக்கிறார்கள் - ஆனால் அவர் சொன்னதைச் செய்வதில் தோல்வி அடைகிறார்கள். தங்கள் உதடுகளினால் அவர்கள் அவரை மதிக்கிறார்கள், ஆனால் அவர்களது வாழ்க்கை ஒருபோதும் மாறுவதில்லை.

### இயேசுவை அசட்டை செய்வது முட்டாள்தனம்.

இரண்டு வீடுகளைப்பற்றிய ஒரு உவமையைத் தன்னுடைய வார்த்தைகளின் படி செய்யாத முட்டாள்தனத்திற்கு ஒப்பிட்டு சொன்னார். இந்த வீடுகளில் ஒன்று மணலின் மேல் கட்டப்பட்டது, மற்றொன்று கற்பாறையின் மேல் கட்டப்பட்டது. புயலும், வெள்ளமும் இரண்டு

[1] மத்தேயு 22:42



நான் இயேசுவை நிராகரித்தால் அழிவை வரவேற்கிறேன்.

வீடுகளின் ஸ்திரத்தன்மையை அச்சுறுத்தியபோது, கற்பாறையின் மேல் கட்டப்பட்ட வீடு உறுதியாய் நின்றது, ஆனால் மணலின் மேல் கட்டப்பட்ட வீடு உடைந்து நாசமானது. இயேசுவுக்கு கீழ்ப்படிபவர்கள் கற்பாறையின்மேல் கட்டப்பட்ட வீட்டைப்போல் நிலைத்திருப்பார்கள். வாசிக்கவும் லூக்கா 6:46-49. வசனம் 49-ஐ எழுதவும்.

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

### நாம் இரட்சிக்கப்படவில்லையென்றால் பாதிக்கப்படுவோம்.

நித்திய தண்டனை

நாம் இயேசுவுக்கு பதில் கொடுக்க மறுக்கும்போது, இப்பொழுது வாசித்த உவமை தெளிவாக விளக்குவதின்படி. நாம் மன்னிப்பை மட்டும் மறுப்பதில்லை, அதோடு நாம் நித்திய அழிவையும் வரவேற்கிறோம். கீழ்க்கண்ட அடிக்குறிப்புகளிலிருந்து[2] இயேசு நித்திய தண்டனையைக் குறித்து வெகு தெளிவாகப் பேசியுள்ளார் என்பதைப் பார்க்கலாம். உலகமானது நிரந்தர அழிவை நோக்கிச் செல்கிறது.[3] அதே வழியில் நாம் போகாதிருக்க கவனமாக இருக்க வேண்டும், அல்லது நாம் நமது பாவங்களுக்கு ஏற்ற விளைவுகளை அனுபவிப்போம். பார்க்கவும் அப்போஸ்தலர் 2:40.

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...



புறாவும் & நெருப்பும்: கடவுளின் ஆவிக்கு இரண்டு அடையாளங்கள்

# நமது பதிலும் கடவுளின் வாக்குபண்ணப்பட்ட உதவியும்

முதலில் நற்செய்தியைக் கேட்டவர்கள் பதில்கொடுக்க விரும்பினார்கள், ஆனால் அவர்களுக்கு அதனை அடைவது எப்படி என தெரியவில்லை. எனவே அவர்கள் ஒரு முக்கியமான கேள்வியைக் கேட்டார்கள் - "சகோதரர்களே நாங்கள் என்ன செய்ய வேண்டும்?." பேதுரு அவர்களுக்கு பதிலாக, "மனந்திரும்பி ஞானஸ்நானம் பெறுங்கள்" என்று சொன்னார். நீங்களும் அதே வழியில் செயல்பட்டு கடவுளைக் கோபப்படுத்தும் காரியங்களிலிருந்து விலகி கிறிஸ்துவின் மீதுள்ள உங்கள் விசுவாசத்தை ஞானஸ்நானத்தின் மூலம் காட்டவேண்டும்.

மனந்திரும்பி விசுவாசிக்கிறவர்களுக்கு ஒரு சிறப்பான உதவியாளர் வாக்குப் பண்ணப்பட்டிருக்கிறார். அவர்களுக்கு கடவுளின் பரிசுத்த ஆவியின் ஈவை வாக்களிக்கிறார்.[4]

### இயேசு பரிசுத்த ஆவியானவரை வாக்கருளியிருக்கிறார்.

விருந்தினர்களில் மிகவும் தூய்மையானவர்.

அவர் மரிப்பதற்குச் சற்று முன், இயேசு தமது சீடர்களுக்கு வாக்கு பண்ணினது வேறொரு நபர் வந்து அவர்களுக்கு உதவி செய்வார் என்பதே. அந்த நபர் பரிசுத்த ஆவியானவரே. கிறிஸ்துவை உங்களது இரட்சகராக அறிந்த நேரமுதல் இந்த உதவியாளர் உங்களோடு வாசம் பண்ண வருகிறார். பார்க்கவும் யோவான் 14:16.

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

---

[2] லூக்கா 16:19-31.

[3] மத்தேயு 7:13

[4] அப்போஸ்தலர் 2:38 ( நீங்கள் இதனைப் பாடம் 6-ல் எழுதினீர்கள் )

### பரிசுத்த ஆவியானவர் ஒரு கிறிஸ்தவனின் ஆசிரியர் மற்றும் வழிகாட்டி.

கடவுளுடைய ஆவியானவர் ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் வழங்கப்பட்ட ஒரு அதிசயமான ஈவு ஆவார். கிறிஸ்தவ வாழ்க்கை சுலபமானதல்ல, ஆனால் பரிசுத்த ஆவியானவர் போதிக்கிறவராகவும், உதவி செய்கிறவராகவும், இருக்கிறதினால் நமக்குத் தேவையான எல்லா பலமும் கிடைக்கிறது, நாம் ஒருபொழுதும் தனிமையில் விடப்படுவதில்லை. பார்க்கவும் யோவான் 14:26.

எப்பொழுதும் இருக்கின்ற உதவியாளர்.

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

### பரிசுத்த ஆவியானவர் நமக்கு ஜெபிக்க உதவி செய்கிறார்.

நாம் உண்மையான கிறிஸ்தவர்கள் என்பதற்கான முதல் அடையாளம் நாம் ஜெபிக்கும் திறமை பெற்றவர்கள். கடவுளை நமது தந்தை என்று அழைக்க கடவுளுடைய ஆவியானவர் நம்மை ஊக்குவிக்கிறார், இப்பொழுது கிறிஸ்துவின் மரணத்தின் மூலமே நாம் அவருடன் ஒப்புரவாக்கப்படுகிறோம். பார்க்கவும் கலாத்தியர் 4:6.

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

# ஒன்று சேர்தலும் வளர்தலும்



கடவுளுக்குச் சொந்தமான குடும்பம்

கிறிஸ்துவில் ஆரம்ப கால விசுவாசிகள் எப்படி நற்செய்திக்கு பதிலளித்தார்கள்? அவர்கள் ஞானஸ்நானம் பெற்றும், திருச்சபையில் சேர்ந்தும் பதிலளித்தார்கள். ஏறக்குறைய 3000 பேர் ஒரே நாளில் சேர்க்கப்பட்டார்கள். அவர்கள் சேர்வது இயற்கையாக நடக்கவேண்டிய காரியமாகும், ஏனெனில் அவர்கள் இப்பொழுது ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் - கடவுளின் குடும்பம். அவர்கள் விரைவில் பலத்தைப் பெற்று முன்னேறுவது மற்ற விசுவாசிகளின் மனமார்ந்த நட்பினாலும்தான்.

### அவர்கள் திருச்சபை குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்

நீங்கள் கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்திற்குள் வருவீர்களானால், நீங்கள் சேரவேண்டியது உண்மையுடன் கிறிஸ்துவின் நற்செய்தியைப் போதிக்கிற திருச்சபையில்தான். நீங்கள் கடவுளுடைய குடும்பத்தில் சேர்ந்து அவர்கள் செய்தது போல ஒழுங்காக கற்க வேண்டும். பார்க்கவும் அப்போஸ்தலர் 2:41.

ஐக்கியம்

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

### குடும்பத்திற்குள் அவர்கள் வளர்ந்தார்கள்

உங்கள் குடும்பத்தில் நீங்கள் ஒழுங்காக உணவைச் சாப்பிட்டால் ஆரோக்கியமாகவும், பலமுள்ளவர்களாகவும் இருக்கலாம். ஒவ்வொரு புதிய விசுவாசியும் வளர்வதற்கு கடவுளுடைய வார்த்தையாகிய பால் தேவைப்படுகிறது. பார்க்கவும் 1 பேதுரு 2:2.

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...



வளர்வதற்கான உணவு

பேதுருவும் மற்ற சீடர்களும் ஆரம்ப கால கிறிஸ்தவர்களுக்கு கடவுளுடைய வார்த்தைகளைப் போதித்தனர். புதிய ஏற்பாடு இந்த மனிதர்களின் எழுத்துக்களை உள்ளடக்கியது. நீங்கள் இவைகளைத் தினசரி வாசித்து இவைகள் உங்களுக்கு விளக்கப்படுவதை கேட்கவேண்டும். இதனைச் செய்வதன்மூலம் நீங்கள் வலுவான கிறிஸ்தவனாக வளர்வதற்குரிய உணவைப் பெறுவீர்கள்.

## அவர்கள் ஒரு நினைவுக்குரிய விருந்தை சாப்பிட்டார்கள்.



அப்பம் பிட்குதல்

ஆரம்பகால கிறிஸ்தவர்கள் அப்பத்தையும் திராட்ச ரசத்தையும் ஒரு நினைவார்ந்த இரா உணவின்போது எடுத்துக்கொண்டனர். அவர்கள் அதனை “அப்பம் பிட்குதல்” என்றழைத்தனர், ஏனென்றால் அவரது உடல் பிட்கப்படுவதற்கு ஒப்பாக இயேசு ஒரு அப்பத்தை எடுத்து அதனைப் பிட்டார், அவர்களுக்காக அவர் மரித்த பொழுது இரத்தம் சிந்தினதற்கான அடையாளமே திராட்சரசம் ஆகும். அவர் சிலுவையில் மரித்த அன்பை அவர்கள் நினைவுகூற வேண்டி அப்பத்தை சாப்பிடவும் திராட்சரசம் குடிக்கவும் அவர்களிடம் சொன்னார். கிறிஸ்தவர்கள் அடிக்கடி கிறிஸ்துவின் அன்பைப் பற்றி[5] இந்த எளிய உணவில் மற்ற விசுவாசிகளோடு பங்கு கொள்ளும்போது சிந்திக்க வேண்டும். பார்க்கவும் அப்போஸ்தலர் 2:42.

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

தகப்பனைப்போன்ற கடவுளின் கரிசனை

அவர்கள் எப்படி ஒன்றாக ஜெபித்தார்கள் என்பதைக் கவனியுங்கள். மற்ற கிறிஸ்தவர்களோடு ஜெபிப்பது ஆவிக்குரிய பலத்திற்கு ஆதாரமாகும். நீங்கள் கிறிஸ்துவில் ஒரு உண்மையான விசுவாசியாக இருப்பீர்களானால் நீங்கள் வீட்டிலோ அல்லது திருச்சபையிலோ அடிக்கடி ஜெபிப்பதில் நிச்சயமாயிருங்கள், கடவுள் இப்பொழுது உங்களுடையவராக இருப்பதை அனுபவியுங்கள். அவர் உங்களுக்காக ஒரு தகப்பனைப்போல கரிசனை கொள்கிறார்; எனவே அவரிடம் உங்கள் தேவைகளைச் சொல்லுங்கள், ஆனால் அவருக்கு நன்றிசொல்ல மறவாதிருங்கள். பார்க்கவும் பிலிப்பியர் 4:6.

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

# முடிவாக

நீங்கள் உங்களைத்தானே ஒரு உண்மை கிறிஸ்தவனாக கருதுவீர்களாகில், நீங்கள் இயேசுவை குறித்து வெட்கப்படக் கூடாது.[6] அவர் ரோம ஆளுநர் (பொந்தியுபிலாத்து)[7] முன்பாக உங்களுக்காக நின்றபோது வெட்கப்படவில்லை, உங்களுக்காக சிலுவைக்குச் சென்றார்.

இயேசுவைக் குறித்து வெட்கப்படுகிறாயா?

எனவே இயேசுவைக் குறித்து மற்றவர்களிடம் பேச ஆயத்தமாயிருங்கள். கடவுள் அதனை மதிப்பார், உங்களுடைய ஆவிக்குரிய வாழ்க்கை வளமாக்கப்படும்.

இப்பொழுது நீங்கள் இந்தப் பாடத்திட்டத்தைப் படித்து விட்டபடியால் நீங்கள் இந்தத் தொடரில் அடுத்த பாடத்திட்டமான “ஒரு கிறிஸ்தவனாக ஆரம்பிப்பது எப்படி” என்பதனை படிக்க விரும்புவீர்கள். இது ஆங்கிலத்தில் உள்ளது. இந்த பாடதிட்டத்தை நீங்கள் www.biblehelp.co.uk என்ற இணையதளத்திலிருந்து எடுத்துக் கொண்டு கணினி உடையவர்களின் உதவியோடு செயல்படலாம். உங்கள் குழுத்தலைவரிடம் இதனைக் குறித்துப் பேசுங்கள்.

---

[5] லூக்கா 22:19-20

[6] மாற்கு 8:38

[7] 1 தீமோத்தேயு 6:12-13.